## தலைமை தேர்தல் அதிகாரி
## புதுச்சேரி

# வாக்காளர் கணக்கெடுப்புப் படிவத்தை இணையவழியில் நிரப்புவது எப்படி?

புதுச்சேரி வாக்காளர்களே! நீங்கள் உங்களது வாக்காளர் கணக்கெடுப்புப் படிவத்தை இணையதளத்தின் வழியாக பூர்த்தி செய்ய விரும்பினால் கீழ்க்காணும் வழிகாட்டுதல்களை பின்பற்றவும்.

இவ்வசதியை பயன்படுத்தும் முன் பின்வருவனவற்றை உறுதிசெய்து கொள்ளவும்:

1. 2025 வாக்காளர் பட்டியலில் உள்ள தாங்கள் தங்களின் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
2. தங்களது கைபேசி எண் வாக்காளர் அடையாள அட்டையின் எண்ணுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. தங்களது பெயர் வாக்காளர் அடையாள அட்டையிலும் ஆதார் அட்டையிலும் ஒரே மாதிரியாக இருத்தல் அவசியம்.

### முதல் படி:

www.voters.eci.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று "Fill Enumeration Form" என்ற இணைப்பைத் தேர்வு செய்யவும்.

### இரண்டாம் படி:

ஒருவேளை நீங்கள் www.voters.eci.gov.in என்ற இணையதளத்தில் கணக்கினைத் துவக்கியிருந்தால் உங்கள் தற்போதைய விவரங்களைக் கொண்டு நேரடியாக உள் நுழையவும் (login).

நீங்கள் www.voters.eci.gov.in என்ற இணையதளத்தில் கணக்கினைத் துவக்காத பட்சத்தில் உங்களது கைபேசி எண் மற்றும் ஒருமுறை கடவுச்சொல் (OTP) மூலமாக உள்நுழைந்து "Fill Enumeration Form" என்ற இணைப்பைத் தேர்வு செய்யவும்.

### மூன்றாம் படி:

தங்கள் மாநிலத்தை தேர்வு செய்து தங்களது தற்போதைய வாக்காளர் அடையாள அட்டையின் எண்ணை உள்ளீடு (Type) செய்யவும்.

ஒருவேளை நீங்கள் வெளிநாடு வாழ் வாக்காளராக இருந்தால் "For Overseas Only" என்பதைத் தேர்வு செய்யவும்.

தங்களது முன்-நிரப்பப்பட்ட படிவம் தோன்றும்.

### நான்காம் படி: படிவம் பூர்த்தி செய்தல்

தங்களது வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண்ணை உள்ளீடு (Type) செய்யவும்.

பிறகு கீழ்க்காணும் மூன்று பிரிவுகளில் தகுந்தவற்றை தேர்வு செய்யவும்:

1. "2002 ஆம் ஆண்டின் சிறப்புத் தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் உள்ள எனது பெயர்".
2. "கடைசியாக நடந்த சிறப்பு தீவிர திருத்தத்தின்போது வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள எனது பெற்றோர் (தாய். தந்தை. தாத்தா மற்றும் பாட்டி) பெயர்".
3. "எனது பெயர் மற்றும் எனது பெற்றோர் பெயர் கடந்த தீவிர சிறப்பு திருத்தத்தின் போது வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை".

### ஐந்தாம் படி: 2002ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுடன் இணைத்தல்

தற்போது தாங்கள் தங்கள் அல்லது தங்களது பெற்றோர்/ தாத்தா/ பாட்டி பெயரை 2002ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுடன் இணைக்க வேண்டும். 2002ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுடன் இணைக்க கீழ்காண்பனவற்றைத் தேர்வு செய்யவும்

- மாநிலம்
- சட்டமன்றத் தொகுதி
- வாக்குச்சாவடி நிலைய எண் மற்றும் பெயர்
- வரிசை எண்
- வாக்காளருடனான உறவுமுறை

இது குறித்த தகவல்கள் www.voters.eci.gov.in என்ற இணையதளத்தில் உள்ள "Search Your name in Last SIR" என்ற இணைப்பைத் தேர்வு செய்யவும்.

அல்லது

உங்கள் மாநிலம்/ ஒன்றிய ஆட்சிப்பகுதி இணையதளம்
புதுச்சேரிக்கு: www.ceopuducherry.py.gov.in
தமிழ்நாட்டிற்கு: www.elections.tn.gov.in

குறிப்பு:

2002ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் உங்களது பதிவு பற்றிய தகவல்களை பெற விரும்பினால் உங்களுக்கு மூன்று தேடுதல் வாய்ப்புகள் வழங்கப்படுள்ளன: பெயர். வாக்காளர் அடையாள அட்டை எண் மற்றும் முகவரி. வாக்குச்சாவடியின் முழு வாக்காளர் பட்டியல் விபரம் pdf வடிவில் கிடைக்கும்.

மேற்சொன்ன முயற்சியிலும் சரியான தகவல் உங்களுக்குக் கிடைக்கப் பெறவில்லையெனில் வாக்குச்சாவடி நிலை அலுவலரை அணுகினால் தங்களுக்கு உதவி புரிவார்.

(உங்கள் வாக்குச்சாவடியின் நிலை அலுவலர் குறித்த தகவல் Playstore / iOS-ல் கிடைக்கும் ECINET செயலி மூலமாகக் கிடைக்கும் அல்லது ceopuducherry.py.gov.in என்ற இணையதள முகவரியிலும் கிடைக்கும்)

### ஆறாம் படி: உங்கள் சொந்த தகவல்களை உள்ளீடு செய்தல்

உங்கள் சொந்த தகவல்களை பூர்த்தி செய்யவும்
(உங்கள் தந்தை. தாய் மற்றும் உங்களது கைபேசி எண் அவசியமானது)
பின் submit பொத்தானை அழுத்தவும்.
தங்கள் படிவம் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது.
இதற்கு 5 நிமிடங்கள் மட்டுமே ஆகும். நீங்கள் உங்கள் படிவத்தைப் பூர்த்தி செய்வதோடு உங்களுடைய உறவினர்களது படிவத்தையும் பூர்த்தி செய்ய உதவவும்.

**தலைமை தேர்தல் அதிகாரி.**
**புதுச்சேரி**

**For English version of this information please scan this QR Code:**

Follow us on: Chief Electoral Officer Puducherry | CeoPuducherry | CeoPuducherry